DPI

# காலாண்டுத் தேர்வு – 2013

**11** - ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம்தாள்** RATHNA

காலம் : 3.00 மணி www.tnschools.co.in மதிப்பெண்கள் : 80

(உரைநடை , துணைப்பாடம் , செய்யுள் நயம் பாராட்டல் , தமிழாக்கம் , மொழித்திறன்)

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த **நடையிலும் அமைதல் வேண்டும்.**

**I பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் பத்து வரிகளின் மிகாது விடையளி.** 3 X 4 = 12

1. நாம் நிலையானவையென்று மதிக்கும் செல்வங்கள் அழியத்தக்கவையே என்பதனை மறைமலையடிகளார் எங்ஙனம் காட்டியுள்ளார்?
2. பெண்பாலர்க்கும் கல்வி இன்றியமையாததே என்னும் கருத்தினை மறைமலை அடிகளார் விளக்குவது யாங்ஙனம்?
3. வீரம் என்னும் சுவை குறித்து ஆசிரியர் கூறியுள்ளன யாவை?
4. பாரியின் கொடை வீரமும் படைவீரமும் யாவை?
5. கங்கை வேடனும் காளத்தி வேடனும் இறைவனுக்கு அளித்த காணிக்கைகளை விளக்குக.

**II பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளின் மிகாது விடையளி.** 3 X 4 = 12

6. முதுகுடிப் பிறந்த மகளிருக்கும் வீரவுணர்ச்சி மிகுந்திருந்தது என்பதனைச் சான்றுடன் விளக்குக.
7. பட்டினத்தடிகள் போற்றிய மூவர் யாவர்? அவர்தம் அருஞ்செயல்கள் யாவை?
8. கைம்மாறு கருதாத அன்பில் கங்கை வேடனும் காளத்தி வேடனும் தலை நின்றமை யாங்ஙனம்?
9. பழந்தமிழரின் படைமாட்சி குறித்து ஆசிரியர் கூறுவன யாவை?
10. அழியாச் செல்வமாகிய கல்வியைப் பயன்படுத்தும் முறையாக மறைமலை அடிகளார் உரைப்பன யாவை?

**III பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளில் மிகாது விடை எழுதுக.** 6 X 1 = 6

11. பெண் கல்வியை வலியுறுத்தி அடிகளார் உரைப்பனவற்றைக் கட்டுரையாகத் தொகுத்தெழுதுக.
12. உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து அழியாப் புகழ் பெற்றனர் காளத்தி வேடனும் கங்கை வேடனும் என்பதனை விளக்கிக் கட்டுரை வரைக.

**IV பின்வரும் வினாக்களுள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.** 2 X 10 = 20

13. "ஒருநாள் கழிந்தது" அல்லது "ஒரு பிரமுகர்" என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

"செங்கமலமும் ஒரு சோப்பும்" அல்லது "மறுமணம்" என்னும் கதையில் இடம் பெறும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. தேங்காய் துண்டுகள். ***(அல்லது)***

மறுமணம் என்னும் சிறுகதையில் நும் மனங்கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

***(அல்லது)***

என்றைக்கும் ஆபத்து பிக்பாக்கெட் என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சியவன் மனந்திருத்தி, உயர்ந்ததாக உம் கற்பனைத் திறத்தினால் ஒரு கதை எழுதுக.

***(அல்லது)***

வெயிலில் படுத்துச் சுருண்டிருந்த உடம்பைக் கண்டவர்கள் பேசுவதாக கற்பனையாகக் கதை எழுதுக.

V பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 X 10 = 10

15. சொல்லுவது எல்லார்க்கும் சுலப மாகும்
சொன்னடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
எழுதியது பிறருக்கே தமக்கென் றெண்ணார்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னது போல் செயல்முயன்றார் இவரைப் போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம்

*- நாமக்கல் கவிஞர்*

VI பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3 X 2 = 6

16. Strike while the iron is hot.
17. All that glitters are not gold.
18. Tit for tat.
19. Man proposes and God disposes.
20. Empty vessels make much noise.
21. Knowledge is power.

VII பின்வரும் பழமொழிகளில் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் (பத்து வரிகளின் மிகாது) எழுதுக. 1 X 4 = 4

22. அ) தன்கையே தனக்குதவி.
ஆ) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
இ) ஆழம் தெரியாமல் காலை விடாதே அல்லது "மழை"
அல்லது "இயற்கை" என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை 8 அடிகளுக்குக் குறையாது 10 அடிகளுக்கு மிகாது எழுதுக.

VIII பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. 10 X 1 = 10

23. பேருந்து நிறுத்துமிடத்தில பல்லிக்கூடம் இறுக்கிறது.
*(தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தியெழுதுக)*

24. எள்ளு செடியிலே வெள்ளை பூ பூத்தது.
*(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.*

25. ஊறுக்காய் வைத்தால் பழையச் சோறு உள்ளேப் போகாதா?
*(தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக)*

26. டாக்டரின் அட்வைஸ்படி காரம் சேர்க்கக் கூடாது.
*(ஆங்கிலச் சொற்களை நீக்கி இனிய தமிழ்ச் சொற்களை இட்டு எழுதுக)*

27. நீதான் என் அத்யந்த ஸ்னேகிதன் என்று கூறிச சந்தோஷித்தான்
*(பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களை இட்டு எழுதுக)*

28. தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்
*(மரபுப் பிழைகளை அறிந்து நீக்குக)*

29. "அலை, அழை" ***(அல்லது)*** "வலி - வளி" *(பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக)*

30. கோழி முட்டை தாவாரத்தில் உருண்டது.
*(கொச்சையான வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.)*

31. நாளை திருவோண நஷத்திரம் கூடிய சுபதினத்தில் விவாஹ சுப முகூர்த்தம்
*(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.)*

32. ஐயனே நான் போகலாற்றேன் ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன் என்றான்.
*(பொருத்தமான நிறுத்தற்குறிகளையிட்டு எழுதுக)*